13.07.2026
O.S.No. 48 / 2020
பி.வா.சா.1– சேதுராமன்

<u>பி.வா.சா 1– சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் டீக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு வாதியை தெரியும். எனது மனைவி பெயர் காளீஸ்வரி, எனது மகன் பெயர் ராம்பிரசாத். நாங்கள் மூவரும் வாதியிடம் ரூபாய் பதிமூன்று லட்சம் கடனாக பெற்றுக்கொண்டு தாவா புரோநோட்டை எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. 4 லட்சம்தான் வாங்கினோம். தாவா புரோநோட்டில் உள்ளது என்னுடைய, என் மனைவியினுடைய மற்றும் என் மகனின் கையெழுத்து என்றால் சரிதான். நாங்கள் மூவரும் சேர்ந்து 01.03.2018 ம் தேதி வாதியிடம் ரூபாய் 13 லட்சம் கடனாக பெற்று அதற்கு ஆதரவாக வா.சா.ஆ–1 புரோநோட்டை எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி ரூபாய் 4 லட்சம் கடன் கொடுத்துவிட்டு, 13 லட்சம் கடன் கொடுத்ததாக கூறுவது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. வேறு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எனக்கு ஒரு வீடு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். மேற்படி வீட்டை 24.03.2020 ம் தேதி சந்தான லட்சுமி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தவுடன் மேற்படி சொத்தை விற்றேன் என்றால் சரிதான். நான் மேற்படிசொத்தை விற்க முயற்சி செய்வதாக சொல்லி அதை ஜப்தி செய்யவேண்டும் என்று வாதி மனு செய்து அதன்பேரில் எனக்கு ஒரு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். நான் வாதியின் கடனை மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் சொத்தை விற்றேன் என்றால் சரியல்ல. சாட்சி தானாக வங்கியிலிருந்து கடன் அறவிப்பு வந்ததால் விற்றதாக கூறுகிறார். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலும், எதிர் வழக்குரையிலும் வங்கியிலிருந்து கடன் அறிவிப்பு வந்ததால் சொத்தை விற்றேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னை நொடிப்பு நிலையர் என்று அறிவிக்க கோரி வாதி திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஐ.பி.எண். 13/2020 தக்கல் செய்து அதில் எனக்கு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அந்த மனு நகல் வா.சா.ஆ-4. அந்த மனுவில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாதியிடம் ரூபாய் 4 லட்சம்தான் கடன் பெற்றேன் என்றும் அதை சிறுக சிறுக செலுத்தியுள்ளேன் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ-1 முதல் 3 ஆவணங்களில் உள்ள தொகை விபரங்களை கூட்டிப்பார்த்தால் மொத்தம் ரூபாய் 4 லடசம் வரவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ-1 முதல் 3 ஆவணங்களில் வாதியின் கையெழுத்து கிடையாது என்றால் சரியல்ல. வாதியிடம் ரூ.2,08,000/- ஐ எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 18.03.2020 ம் தேதி கொடுத்தேன். அதற்கு வாதி ரசீது கொடுக்கவில்லை. நான் வாதியிடம் எந்த தொகையும் செலுததவில்லை என்றும், வாதியிடம் வாங்கிய 13 லட்சம் கடனை திருப்பி செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியை பணம் வாங்குவதற்கு முன்பிருந்து சுமார் 5, 6 வருடங்களாக எனக்கு தெரியும். வாதி திண்டுக்கல் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் தொழிற்சாலை வைத்து தொழில் செய்து வருகிறார் என்றால் தொழில் செய்கிறார். சாட்சி தற்போது அவர் தொழில் செய்கிறாரா இல்லையா என்று தெரியாது என்றும், பைனான்ஸ் தொழில் செய்கிறார் என்று கூறுகிறார். வாதி பல நபர்களுக்கு கடன் கொடுக்கும் பைனான்ஸ் தொழில் செய்கிறார். வாதி கந்துவட்டி மற்றும் மீட்டர் வட்டி எதுவும் கொடுப்பது இல்லை என்றால் சரியல்ல. இது சம்மந்தமாகஅவர் மீது காவல்துறை வழக்கு உள்ளதா என்று எனக்கு தெரியாது.

வாதியிடம் கடன் ரூபாய் பதிமூன்று லட்சம் பெற்றுக்கொண்டு அந்த கடனை மோசடி செய்யவேண்டும் என்று பொய்யான விபரங்களை எதிர்வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 முதல் 3 வரையான ஆவணங்கள் என்னால் உற்பத்தி செய்யப்பட்டவை என்றும், அவை வாதியால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி பிராதில் கோரியுள்ள கடன் தொகையை வட்டியுடன் திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.13 16:12:14 +0530

Principal District Judge,
Dindigul.